முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No. 6/2018

DW4– சாந்தி நாள் 12.02.2025

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி பிராதில் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியும். நானும் என் மகளும் ஒன்றாக தான் இருக்கிறோம் என்றால் சரியல்ல. தனித்தனியாக தான் இருக்கிறோம். நான் எசனையில் வசிக்கிறேன். என் மகள் வாதி அவர் கணவர் வீட்டில் வசிக்கிறார். தாவாவில் என்னென்ன சொத்து விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். சொத்தின் தன்மையும் அது யார் மூலமாக யாருக்கு கிடைக்கப்பெற்றது என்ற விவரமும் எனக்கு தெரியும். சர்வே எண்.154/23சி என்ற சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்து 3ம் தரப்பினர் சொத்து என்று சொன்னால் சரியல்ல. அது என் மாமனார் மாமியார் சொத்து. மேற்படி சொத்தின் பட்டா வேறு நபர்கள் பெயரில் இருப்பதால் அது எங்கள் குடும்ப சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. என் மகள் 09.07.1992 ல் பிறந்தார். வாதி 06.09.1992 ல் பிறந்தார் என்று சொன்னால் அது தவறு. நான் ஜெயபிரகாஷ்க்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். பி.வா.சா.ஆ.2 ல் 20.11.1990 –க்கு பிற்பாடு ஜெயபிரகாஷ் உடன் சேர்ந்து வாழவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2017 ஆம் ஆண்டு மீண்டும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.4 ல் ஏற்கனவே அனுப்பிய அறிவிப்பின் சங்கதிகளை ஒப்புக்கொண்டு மீண்டும் திரும்ப அழைத்து செல்ல சட்டப்படி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4க்கு ஜெயபிரகாஷ் பி.வாசா.ஆ.5 பதிலறிவிப்பு அனுப்பினார்.

பதிலறிவிப்பில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். அந்த அறிவிப்பில் 1990 ஆம் ஆண்டே ஜெயபிரகாசுக்கும் எனக்கும் நடந்த திருமணம் பஞ்சாயத்தார் முன்னிலையில் ரத்து செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை. ஊர் பெரியவர்களை வைத்து பஞ்சாயத்து நடந்ததாக நான் பி.வா.சா.ஆ-2 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.20 ல் காவல்நிலைய முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20 பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் அது உண்மையாக இருந்தால் காவல்துறை முத்திரை இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. பி.வாசா.ஆ.20 ன் பேரில் எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் அது தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் சம்பந்தமாக ஜெயபிரகாஷை எப்போதும் அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகளுக்கு அனுப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3ல் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4ல் 1997 ல் புகார் கொடுத்தது சம்பந்தமாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் பி.வா.சா.ஆ.20 ல் புகார் கொடுக்கப்பட்டு இருந்தால் பி.வா.சா.ஆ.4ல்அது பற்றி சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. 2வதாக ஜெயபிரகாஷ் திருமணம் செய்து கொண்டார் என்பது என் மகள் U.K.G படிக்கும் போதுதான் தெரிய வந்தது. 1997 ல் என் கணவருக்கு 2வது திருமணமானது தெரிய வந்தது என்றால் அது பற்றி தெரியவில்லை. என் மகளின் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் பள்ளி ஆவணங்கள் ஆகியவை உள்ளது. அவற்றை நானோ என் மகளோ

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் ஜெயபிரகாஷ் தந்தை என்று குறிப்பிடப்படாததால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஜெயபிரகாஷின் 2வது திருமணத்தின் மூலம் அவருக்கு 3 குழந்தைகள் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி தகப்பனார் பெயர் அகரம் ராமசாமி. 1ம் பிரதிவாதியின் கணவர் கிருஷ்ணனின் அம்மா பெயர் பட்டத்தம்மாள். பட்டத்தம்மாளுக்கு என்ன சொத்து இருந்தது என்று எனக்கு அப்போதைக்கு தெரியாது. அகரம் ராமசாமிக்கு என்ன சொத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையில் உள்ள விவரங்கள்எனக்கு தெரியும். அகரம் ராமசாமி அவருடைய மகளுக்கு சொத்துக்கள் கொடுத்ததாக எதிருரையில் சொல்லியுள்ளது தெரியும். ஏ ஷெட்யூலில் உள்ள 6வது இலக்க சொத்து பட்டத்தம்மாள் பெயரில் 1938ல் கிரையமாக வாங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 அந்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். ஏ ஷெட்யூலில் உள்ள 1, 3 ,4, 8 இலக்க சொத்துக்கள் 1952 ல் செல்லம்மாளின் தகப்பனார் அகரம் ராமசாமி, கிருஷ்ணன் பெயரில் வாங்கப்பட்ட கிரைய சொத்துக்கள் என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் அனைத்திலும் என் மாமியாருக்கு பாகம் பிரித்து கொடுத்தார்கள். எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாகம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் மாமியாருக்கு கிடைக்க கூடியதாக சொல்லப்படும் சொத்துக்கள் உயில்மூலமாகவும், வாரிசு முறைப்படியும் கிடைத்தவை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஏ ஷெட்யூலில் உள்ள 6, 7வது அயிட்ட சொத்துக்கள் என் மாமனாரின் தாயார் மூலமாக என் மாமனாருக்கு கிடைக்க பெற்று அவர் அதை 3ம் பிரதிவாதிக்கு பி.வா.சா.ஆ-16, மற்றும்

பி.வா.சா.ஆ.17 மூலமாக கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.18 ன் மூலமாக கிருஷ்ணனும், செல்லம்மாளும் அவர்களின் பேரன்களான பாலகிருஷ்ணன், ராஜரத்தினம் ஆகியோருக்கு ஏ ஷெட்யூலில் உள்ள 1, 3, 4 மற்றும் பி ஷெட்யூலில் உள்ள 1, 2 , 4 முதல் 13 வரை உள்ள சொத்துக்களை உயில் மூலமாக எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அகரம் ராமசாமி 1ம் பிரதிவாதிக்கு பி.வா.சா.ஆ-12 உயில் மூலமாக ஏ ஷெட்யூலில் உள்ள 8வது அயிட்ட சொத்து மற்றும் பி ஷெட்யூலில் உள்ள 1, 2 , 4 முதல் 13 வரை உள்ள சொத்துக்களை உயில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு பி.வா.சாஆ-12 மூலமாக கிடைக்கப்பட்ட சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதில் எனக்கு பாகம் இல்லை என்றால் சரியல்ல. செல்லம்மாள் பெயரில் பி ஷெட்யூலில் உள்ள 3, 5, 6 சொத்துக்கள் பி.வா.சா.ஆ.10, பி.வா.சா.ஆ-11 மூலமாக பாத்தியம் என்றால் சரியல்ல. ஏ ஷெட்யூலில் உள்ள 7 வது அயிட்ட சொத்து என் மாமனாரின் தாயார் பெயரில் கிரையமாக வாங்கப்பட்டது என்றால் சரிதான். என் மாமனார் இறக்கு வரை சொத்து சம்பந்தமாக பேச்சுவார்த்தை எதுவும் இல்லாமல் தனியாக தான் இருந்தேன் என்றால் சரியல்ல. என் மாமனாரும், கணவரும் என் திருமணத்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் முறித்தபிறகு தான் பரிமளாவை திருமணம் செய்தார் என்றும் எனவே அந்த திருமணம் செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. என் திருமணம் முறிவு ஏற்பட்டதால் ஜெயபிரகாஷ் மூலமாக எனக்கு பாகம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. அதை தான் ஜெயபிரகாஷ் தன்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும் எதிருரையிலும் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.19

வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணம் உண்மையானது என்றால் அது முன்னரே பெறப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக தான் பி.வா.சா.ஆ.19 தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் பெயர் ஜெயபிரகாஷ் தான். பி.வா.சா.ஆ.21 ல் ஜெயபிரகாசம் என்று கையெழுத்து உள்ளது என்றால் என் கணவர் ஜெயபிரகாசம் என்று தான் கையெழுத்து போடுவார். வெளிநாட்டில் இருந்து அனுப்பும் தபால்கள் அனைத்திலும் அவ்வாறு தான் கையெழுத்து போடுவார். பி.வா.சா.ஆ.21 ஆவணம் வெளிநாட்டிலிருந்து தான் வந்தது என்பதற்கு எந்தவித தபால் கவரும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.21ல் உள்ள சங்கதிகளும் கையெழுத்தும் ஜெயபிரகாஷ் உடையது அல்ல என்றால் சரியல்ல. ஏ ஷெட்யூலில் உள்ள சொத்துக்களின் வருமானத்தின் பேரில் தான் மற்ற சொத்துக்கள் வாங்கப்பட்டதாக என்றால் என் மாமனார் வருமானத்தில் வாங்கப்பட்டது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சொத்து என்றும் என் கணவரின் தாயார் வழி சொத்து என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில் எந்த காலத்திலும் நான் அனுபவித்ததே இல்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டு சுவாதீனத்தில் இருந்ததாக தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை அடித்து விரட்டிவிட்டதாக தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். ஜெயபிரகாஷ் பரிமளாவுக்கு பிறந்த 3 பிள்ளைகளையும் வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எவ்வளவு பாகம் கோரியுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கிருஷ்ணன் எழுதி வைத்த உயில் மூலமாக அவர் பேரன்களுக்கும் மகள்களுக்கும் சொத்துக்கள் சென்றடைந்துவிட்டது

என்று சொன்னால் சரியல்ல. அவர் மகனை விட்டுவிட்டு மகள்களுக்கு சொத்து கொடுக்கமாட்டார். கிருஷ்ணன் மகன் வழி பேரன்களுக்கு சொத்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் எழுதிய உயிலையும் 1ம் பிரதிவாதியும் கிருஷ்ணனும் சேர்ந்து எழுதிய உயிலையும் உண்மை என்று 1ம் பிரதிவாதி கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் போட்டோ, பொங்கல் வாழ்த்து என்று தான் கூறியுள்ளேன். எனக்கும் ஜெயபிரகாஷ்க்கும் ஏற்பட்ட திருமணம் முறிந்துவிட்டதாலும் வாதி எனக்கும் ஜெயபிரகாஷ்க்கும் வாதி சட்டப்படியாக பிறந்த வாரிசு இல்லை என்பதாலும் எனக்கும் வாதிக்கும் எந்த சொத்தும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. அதனால் தான் ஜெயபிரகாஷ் உயிருடன் இருந்த வரையிலும் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்திலிருந்து அடித்து விரட்டப்பட்ட 27 ஆண்டுகள் கழித்து தாவா சொத்தில் உரிமை கோர எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ4 அறிவிப்பை ஜெயபிரகாஷ் என்னுடன் சேர்ந்து வாழ்ந்திருந்தால் அனுப்ப வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. ஜெயபிரகாஷ் உயிருடன் இருந்தவரை அவர் 2வது திருமணத்தை பொருத்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது திருமணம் ரத்து ஆனதால் தான் நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்பதால் இந்த தாவா நிலைநிறுத்ததக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge, Perambalur.